Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 11-2-1985 திங்கட்கிழமை (தை 29-ஜ அவ் 20) முழக்கம் 7

## கசிப்புக் கடத்தலால் வந்த வினை! முல்லைத்தீவில் ஒருவர் மரணம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவுக்கு தனியார் காரொன்றில் கசிப்புக் கடத்தி வந்தவர்கள் வட்டுவால் என்ற இடத்தில் இராணுவத்தினரிடம் சிக்கிக் கொண்டதாக தெரியவந்துள்ளது கசிப்பைக் கடத்தி வந்தவர்களிடமே கசிப்பைக் குடிப்பதற்குக் கொடுக்கப்பட்டதாம். இதனால் மூவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் பின்னர் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் பின்னர் மரணமானதாகவும், இது தொடர்பாக மரண விசாரணை இன்று நடைபெறலாமெனவும் தெரியவந்துள்ளது, சம்பந்தப்பட்ட காரும், கசிப்பும் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

# எம். ஜி. ஆர். தமிழக முதல்வராக பதவி ஏற்றார் மந்திரி சபை பட்டியல் நாளை அறிவிக்கப்படும்

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சராக திரு. எம். ஜி இராமச்சந்திரன் நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு ஆளுநர் திரு எஸ். எல். குரானா முன்னிலையில் ராஜ்பவனில் சத்தியப் பிரமாணமும், இரகசியக் காப்புப் பிரமாணமும் எடுத்துக்கொண்டார். திரு. இராமச்சந்திரன் தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்பது இது மூன்றாவது தடவையாகும்.

எளிய நிகழ்ச்சியாக இப் பதவியேற்பு வைபவம் நடைபெற்றபோது லோக சபைத் துணைச் சபாநாயகர் திரு. தம்பித்துரை, சட்ட சபை சபாநாயகர் திரு கே ராஜாராம், சட்ட மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம், திருமதி ஜானகி இராமச்சந்திரன், டாக்டர் ஸ்ரீபாதராவ் நியூயோர்க்கிலுள்ள தமிழ்ப் பேரவைத் தலைவர் டாக்டர் பழனி பெரியசாமி, திருமதி இந்திரா குரானா. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்

ஆளுநர் ஆங்கிலத்தில் பதவிப்பிரமாணத்தை வாசித்தார். முதல்வர் தமிழில் பதவிப் பிரமாணம் எடுத்துக்

—4-ம் பக்கம் பார்க்க

★ திருவனந்தபுரத்தில் 24 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட

# 16,000 கிலோ ஆயுதம் நிரம்பிய டிசி-8 விமானம் கொழும்பு வந்தது

(பி.ரி. ஐ. ராய்ட்டர்)

எரிபொருள் பற்றாக்குறையினால் நேற்று முன்தினம் தென்னிந்தியாவிலுள்ள திருவனந்தபுரம் விமான நிலையத்தில் இறங்கிய ஆயுதங்கள் நிரம்பிய 'டி சி 8' விமானம், 24 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டபின் அங்கிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. 16,000 கிலோ ஆயுதங்கள், வெடி மருந்துகளுடன் இந்த சரக்கு விமானம் நேற்று நண்பகலளவில் கட்டுநாயக்கா விமானநிலையம் வந்தடைந்தது.

இரண்டு பிரிட்டிஷார், ஒரு பெல்ஜியப் பிரஜை, ஒரு சிரிய நாட்டுப் பிரஜை ஆகியோருடன் போர்த்துக்கலில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், வெடி மருந்துகளுடன் வந்த இவ் விமானம் சந்தேகத்தின் மீது சோதனையிடப்பட்ட போதே ஆயுதங்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாம். உடனடியாக விமானத்துள் இருந்த நால்வரும் திருவனந்தபுரம் விமான நிலையத்துக்கருகிலுக்கும் ஹோட்டல் ஒன்றுக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

புதுடில்லிக்கு விஷயம் அறி

—4-ஆம் பக்கம் பார்க்க

## கோவில் முன்னால் ஒரு சடலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு முன்னால் காட்டிக் கொடுப்பவரென்று சொல்

— 4ம் பக்கம் பார்க்க

## பாரத விஜய பெறுபேறை இன்று ஜனாதிபதியிடம் லலித் விளக்குவார்!

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருப்பவை பற்றியும், இரு இனங்களும் விட்டுக் கொடுக்கக் கூடியவை பற்றியும், இப் பிரச்சினை தொடர்பான இலங்கை மக்களின் விருப்பம் பற்றியும் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியிடம் தாம் எடுத்துக்கூறியதாக அமைச்சர் அத்துலத்முதலி புதுடில்லியிலிருந்து இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னர் தெரிவித்தார்.

தாம் இருவரும் சிறந்த முறையிலும் சினேகபூர்வமாகவும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அமைச்சர் தெரிவித்தார் தமது நான்குநாள் விஜயத்தை மூன்று நாட்களாகச் சுருக்கிக் கொண்டு நேற்றிரவு அமைச்சர் நாடு திரும்பினார்.

இலங்கை இந்திய உறவு உயர் மட்டத்தில் பேணிப் பாதுகாக்கப்படும் என்றும், இருநாடுகளின் எல்லைப்பிரச்சினை பற்றியும் கூட பாரதப் பிரதமருடன் தாம் பேசியதாக

—4-ம் பக்கம் பார்க்க

### ராஜீவின் கருத்து

இலங்கையின் இனபபிரச்சினை பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வினால் மட்டுமே தீர்க்கப்பட முடியும் என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி வலியுறுத்திக் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தில் பல கூட்டங்களில் உரையாற்றிய அவர் அங்கிருந்து புறப்படும் போது விமான நிலையத்தில் வைத்து பத்திரிகை நிருபர்களிடம் இவ்வாறு குறிபபிட்டார்.

## யாழ் மாவட்ட மீனவருக்கு இலவச உணவுப் பொட்டலம்

யாழ் மாவட்டத்திலுள்ள மீனவ குடும்பங்களுக்கு போரூட், றெட்பானா, சர்வோதயம் ஆகியன இணைந்து அளிக்கும் நிவாரண உதவிகள் முதல் முறையாக வழங்கப்படவுள்ளன. நான்கு டின் மீன், ஒன்றரைக்கிலோமசூர்பருப்பு, இரண்டு கிலோ அரிசி, மூன்று பக்கட் லக்டஜன் பாலமா, நான்கு பக்கட்அங்கர் பால்மா ஆகியன ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கும் அளிக்கப்படவுள்ளன.

12ம் திகதி செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளுக்கு விநியோகம் ஆரம்பமாகும். இதில் மேற்படி மூன்று அமைபபுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மேற்படி மூன்று

—4-ம் பக்கம் பார்க்க

## மாவுக்குத் தட்டுப்பாடு; பேக்கரிகளில் பாண் இல்லை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் மாவுக்கான தட்டுப்பாடு காரணத்தால் அதிகமான பேக்கரிகளும் பாண் தயாரிப்பதைக் கடந்த சில நாட்களாக நிறுத்தியுள்ளதால் பாணுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

பேக்கரிகளுக்கு மா விநியோகம் செய்து வந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமும் கையிருப்பில் மா இல்லை

— 4-ம் பக்கம் பார்க்க

நேற்றைய கொள்ளையால்

## யாழ் மின்சார சேவைகள் பாதிக்கப்படும் அபாயம்!

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, அரசடிச் சந்தியிலுள்ள இலங்கை மின்சார சபை அலுவலகத்துள் நேற்றுக் காலை ஆயுதங்கள் சகிதம் நுழைந்த இளைஞர்கள், அங்கிருந்த சுமார் ஒன்றேகால் லட்சம்

—4-ம் பக்கம் பார்க்க

## சங்கக் கடைக் கொள்ளையில் 5 லட்சம் ரூபா பறிபோனது

(மண்கும்பான்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கொள்ளையின்போது ஐந்து லட்சத்து பதினோராயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்ட

—4ம் பக்கம் பார்க்க

பாரதத்தின் அமெரிக்க தூதர் பான்ஸ்:

## தமிழரின் நியாயபூர்வ கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும்

(மதுரை)

''இலங்கைத் தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகளை ஏற்குமாறு இலங்கை அரசுக்கு அமெரிக்க அரசு வற்புறுத்தியுள்ளது'' என்று பாரதத்துக்கான அமெரிக்கத் தூதுவர் திரு. பான்ஸ் மதுரையில் தனக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசுகையில் சொன்னார்.

''இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்'' என்ற தனது கருத்தையும் திரு. பான்ஸ் வெளியிட்டார்.

'அமெரிக்காவுக்கும் பாரதத்துக்கும் இடையே கருத்து வேற்றுமை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் உயரதிகாரிகள் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவர்'' என்றும் திரு பான்ஸ் தெரிவித்தார். அவர் அருள்மிகு மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்திற்கும் சென்று வழிபட்டார்.

இதேவேளை இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி சமீபத்தில் மேற்கொண்ட அமெரிக்க விஜயத்தின்பின் அவர் பாரதத் தலைநகரில் உள்ள வேளையில் இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடுபற்றிய விடயம் பாரதத்துக்கான தூதுவர் மூலமாக மதுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பது அதி முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் நிகழ்வாகக் கருதப்படுகிறது.

## கடும் சோதனையும் குண்டுச் சத்தமும்

சண்டிலிப்பாய், சங்கானை, மாசியப்பிட்டி பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் கடும் சோதனை நடைபெற்றது. சிலர் கைதானதாகவும் தெரிய வந்துள்ளது. இடைக்கிடையே குண்டு வெடித்த சத்தங்களும் கேட்டன.

# மீண்டும் ஜீ. சி. ஈ. பரீட்சை நடத்துவதற்கு வேம்படி மகளிர் கல்லூரியினர் பாராட்டு

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி பத்தாம்வகுப்பு மாணவிகளின் பெற்றோர் சங்கக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது, கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கஷ்டப்பட்டுப் படித்த நமது பிள்ளைகளின் க. பொ. த (சாதாரண தர) பரீட்சை பின்போடப்படுவதால் அவர்களின் எதிர்காலம் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவே எதிர்வரும் இருபதாம் திகதி முதல் இருபத்தெட்டாம் திகதி வரை நடைபெறவுள்ள இப் பரீட்சையை சீராக நடாத்த பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டனர்.

அத்துடன் இப்பரீட்சையை மீண்டும் நடைபெற ஏற்பாடு செய்த யாழ் கல்விப் பணிப்பாளருக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

சென்ற டிசம்பரில் இப் பரீட்சை முழுமையாக நடைபெருததால் முழுப் பாடங்களையும் நடாத்தும்படி பரீட்சை ஆணையாளரை வேண்டும் தீர்மானமும் நிறைவேறியது.

இக்கூட்டத் தீர்மானங்கள் யாழ் பிரஜைகள் குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது




✳ யாழ் – ஹலீமா அப்துல் காதர் ரேட் ராசிக் மன்சூரா தம்பதிகளின் மகன் முஹம்மது அஸ்லம் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ காரைநகர். தர்மலிங்கம் இராசேஸ்வரி தம்பதிகளின் மகன் பிரதீபன் இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஆனைக்கோட்டை ஜெகநாதன் மேரி எலசபெத் தம்பதிகளின் மகள் நிரோஜா இன்று தனது மூன்ருவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

✳ சுன்னுகம் நவரத்தினலிங்கம் கமலேஸ்வரி தம்பதிகளின் மகள் யசோ இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

✳ நல்லூர் குணநாயகம் சிவபாக்கியம் தம்பதிகளின் மகன் சிவதர்மகுமார் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

## சுகாதார சேவை வாகனக் கடத்தல்; யாழ். சுகாதாரப் பணிப்பாளர் வேண்டுதல்

யாழ்ப்பாணம் சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் க, மாணிக்கம் நேற்று பத்திரிகைகள் மூலம் விடுத்துள்ள ஒரு வேண்டுகோள் வருமாறு–

அத்தியாவசிய சேவைகளில் ஒன்ருகிய சுகாதார சேவைக்காக பாவிக்கப்படும் வாகனங்கள், இயக்கங்களின் பேரால் துப்பாக்கி முனையில் அபகரிக்கப்படுவதை மிகுந்த மனவேதனையுடன் நோக்குகின்றேன். மற்றைய திணைக்களங்களைப் போலல்லாது எமது திணைக்களம் பொதுமக்களின் வைத்திய தேவை, போசாக்குணவு என்பவற்றை நிறைவேற்றுவதற்காக தனது சேவையை அளித்து வருகின்றது. குறிப்பிட்ட வாகனங்களும், இவ் அத்தியாவசியசேவைகளுக்காக பயன்படுத்தப் படுவனவாகும். இத்திணைக்கள வாசனங்கள் பறிமுதல் செய்யப்படுவதால், எமது வைத்தியசாலைகளுக்கு மருந்து, தடை ஊசி, திரிபோஷா, பிராண வாயு என்பனவற்றை விநியோகிக்க முடியாது போய்விடுகின்றது தனல், நோயாளர்கள் மிகவும் பாதிப்படைகின்றனர். இந்நிலை தொடருமானல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளின் சிகிச்சைப் பிரிவுகள் முற்ருகத் தடைப்படும் நிலையை அடையலாம்.

ஏற்கனவே, இத்திணைக்களத்துக்கு சொந்தமான 4 வாகனங்கள் இயக்கத்தின் பிரதிநிதிகள் எனத் தம்மை அறிமுகப்படுத்திய இளைஞர்கள் சிலரால் துப்பாக்கி முனையில் அபகரிக்கப் பட்டுள்ளன. இதனல், தெல்லிப்பளை, கிளிநொச்சி, பருத்தித்துறை போன்ற வைத்திய சாலைகளின் நடவடிக்கைகள் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளன. இவ் வைத்திய சாலைகளுக்கு போதிய மருந்துகள் விநியோகிக்க முடியவில்லை, தேவையான தடை ஊசிகள் அனுப்ப முடியவில்லை, போசாக்குக் குறைந்த குழந்தைகளுக்கு திரிபோஷா விநியோகிக்க முடியவில்லை அவசர சத்திர சிகிச்சைகளுக்கான பிராண வாயு விநியோகிக்க முடிவதில்லை.

இது தவிர, குறிப்பிட்ட வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராக திணைக்களம் நடவடிக்கை எடுப்பதால் அவர்களும், அவர்களது குடும்பத்தினரும் பாதிக்கப்படும் நிலை உருவாகின்றது. இந்நிலையில், சுகாதார சேவைகளின் ஆகக் குறைந்த தேவைகளையேனும் என்னல் நிறைவேற்ற முடியாதுள்ளது. எமது பொது மக்களுக்கு இத்துணை இடையூறு விளைவிக்கும் இவ் வாகனக் கடத்தல்களை விடுதலை இயக்கங்கள் செய்ய வேண்டுமா? உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் எமது சகோதரர் ஒருவர் மருந்து அல்லது பிராண வாயு அல்லது தடை ஊசி இல்லை என்ற நிலையில் உயிர் விட வேண்டுமா? எனவே, இத்திணைக்கள வாகனமொன்றை அபகரிப்பது எவ்வளவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

தொடர்ந்தும் எமது வைத்தியசாலைகளின் சேவைகளை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்டோர் திரும்பத் தந்துதவுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். தொடர்ந்தும் இயக்கத் தேவைகளுக்காக எமது திணைக்கள வாகனங்களை அபகரிக்க வேண்டாமெனவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்ருன வைத்தியசேவையை தொடர்ந்தும் எமது பொது மக்களுக்கு அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட இளைஞர்களின் ஒத்துழைப்பை பணிவன்புடன் நாடுகின்றேன் என்றும் அவர் கேட்டுள்ளார்.

## எம. ஜி ஆர் பெயரில் அன்னதானம்

(உடுப்பிட்டி)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் சுகமுடன் வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி தமிழ்மக்களுக்கு நற்பணி ஆற்ற வேண்டும் என வேண்டி கரவெட்டி ஸ்போர்ஸ் விளையாட்டுக் கழகம் அன்னதானம் ஒன்றை இம்மாதம் 17ம் திகதி வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் நடத்தவுள்ளது.


## வரிவிளம்பரம்

### விற்கவும் வாங்கவும்

சகலவித பொருட்களும் விற்கவும் – வாங்கவும் தினமும் வாருங்கள்.

ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

### சேவை

சகல கிரகதோஷ நிவிர்த்திகளுக்கும் சகலவித சௌபாக்கிய விருத்திகளுக்கும் சாஸ்திர விதிப்படி செய்யப் பெற்றதும் பூஜையில் வைக்கப்பெற்றதுமான ஸ்ரீ சக்கரம் பெற்றுக்கொள்ளலாம். ஏல விற்பனை நிலையம் கோப்பாய்-

அல்சேசன் ( Pure Alsation ) 6 கிழமை அழகான குட்டிகள் உண்டு தாய் ரெலிவிசனில் வந்த Lassie யின் வர்க்கம் கொழும்பில் இருந்தவை 139, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.

5 1/2 பரப்புக் காணி காய்க்கும் தென்னைகளுடன் குளிக் கண்டி ஒழுங்கை, கோப்பாய் தெற்கில் வீடு கட்டக்கூடியது.

விபரங்களுக்கு: ஏல விற்பனை நிலையம், பொதுச் சந்தை, கோப்பாய்


## சாவகச்சேரி கொள்ளை

(சரசாலை)

இலங்கை மின்சாரசபை சாவகச்சேரி டிப்போவில் நேற்று முன்தினம் பரல்கள், பாரக்கயிறு போன்றவற்றை இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி அங்கிருந்தவர்களை பயமுறுத்திவிட்டு எடுத்துச் சென்றதாக புகார் செய்யப் பட்டுள்ளது.

## உரியவர் யார்?

அரியாலையைச் சேர்ந்த கருணைராஜா அல்டஷ் சுசந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை கீழே கிடக்கக் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் 'ஈழமுரசு' அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## டாக்டர் விசாரணை

குருநகரிலுள்ள முன்னாள் மாநகரசபை உறுப்பினரானபிரபல டாக்டர் ஒருவர் மூன்று தினத்துக்கு முன்னர் முகாமுக்கு அழைக்கப்பட்டு சுமார் மூன்று மணித்தியாலங்களாகக் கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின் வீடு செல்ல அனுமதிக்க பட்டார் தனியார் மருத்துவமனையொன்றை நடத்திய இந்த டாக்டரிடம் சில தினங்களுக்கு முன் இப்பகுதியில் நடைபெற்ற தாக்குதல் முயற்சியொன்று பற்றி விசாரிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது

## "பாலர் தமிழ் நூல்" பாலர் உள்ளங்களில் இடம்பெறும்

(புங்குடுதீவு)

"பாலர்களுக்குப் பயன் தரும் புதிய நூல்கள் பெருமளவில் வெளிவரவேண்டும். இன்றைய சூழ்நிலையில் இத்துறையில் நமது படைப்பாளிகள் கவனம் செலுத்தவேண்டும். பாலர் கல்வித்துறையில் திரு. துரைசிங்கம் ஆற்றிவரும் தொண்டு பாராட்டற்குரியது. அவரது "பாலர் பாட்டு" நூல்கள் பாலர்களின் உள்ளங்களில் இடம் பெற்றுள்ளதைப் போன்று பாலர் தமிழும் சிறப்பிடம் பெறுவது திண்ணம்.'

இவ்வாறு ஆசிரியமணி சி. க. நாகலிங்கம் புங்குடுதீவு ஸ்ரீ கணேசமகா வித்தியாலயத்தில் நடைபெற்ற "பாலர் தமிழ்" நூல் வெளியீட்டு வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாலர்களுக்குப் பயன் தரும் நூல்களைப் பெருமளவில் வெளியிட நமது நாட்டு வெளியீட்டாளர்கள் முன்வர வேண்டுமென்றும், தமிழகத்திலிருந்து வெளிவரும் நூல்களை நம்பி வாழும் நிலை இருக்கக் கூடாதெனவும் கூறினர்.

திரு சி. இரத்தினசபாபதி பேசுகையில் ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கு அமைவாக பாலர்களின் கருத்தைக்கவரும் வகையில் வண்ணப் படங்களுடன் "பாலர் தமிழ்" வெளிவந்திருப்பது பாராட்டற்குரியது என்ருர்.

நூலாசிரியர் திரு த. துரைசிங்கம் உட்படப் பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

## இலவசம்

சிவராத்திரி தினத்தன்று "சைவ அநுட்டானம" செய்ய விரும்பும் கோயில்கள், தொண்டர் சபைகளுக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலா அவர்கள் இயற்றிய நித்திய கரும விதி சைவ அநுட்டான விதி விளக்க நூலை மில்க்வைற் ஸ்தாபனம் வழங்குகின்றது.


## மரண அறிவித்தல்

### G. R. அரியரட்ணம் (சூலம்)

வவுனியா நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த G. R. அரியரட்ணம் காலமானர். இவர் சந்திராணியின் (சைவப் பிரகாச வித்தியாசாலை, வவுனியா ) அன்புக் கணவரும், அனோஜா, வினிதா ஆகியோரின் அருமைத் தகப்பனும், காலஞ்சென்ற B V. அரியரட்ணம், ரூபி அரியரட்ணம் ஆகியோரின் அன்பு மகனும், இராஜன் (Singapore). செல்வம் (Ceylon Tobacco), ஞானே (Papua New Guinea) ஆகியோரின அருமைச் சகோதரருமாவார். நல்லடக்கம் இன்று 11-2-85 காலை 9 மணிக்கு பரியோவான் சேமக்காலையில் நடைபெறும்.

28, 4 ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

## நிருபர்கள் தேவை

ஈழமுரசு காங்கேசன்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு பகுதி நிருபர்கள் இம்மாத இறுதியில் வெளிநாடு செல்வதால் மார்ச் முதலாம் திகதி முதல் இப்பகுதிகளில் நிருபர்களாகப் பணியாற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஊர்காவற்றுறை, மாதகல், அளவெட்டி வல்வெட்டித்துறை, பளை, பரந்தன், பூநகரி ஆகிய இடங்களுக்கும் உடனடியாக நிருபர்கள் தேவை.

அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களே விண்ணப்பிக்கலாம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்லறிவும், செய்தி சேகரிப்பதில் ஆர்வமும் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். என்வலப்பின் இடபக்க மேல் மூலையில் 'நிருபர் பதவி' என்று குறிப்பிடவும்.

சகல விண்ணப்பங்களும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 25-2-1985

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:–

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் ஆபரணங்களுக்கு
கடன் உதவி
பெற இன்றே நாடுங்கள்

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உதய சிந்தனை

பிறர் விடுதலை மறுப்பவர்கள் தாமும் அதற்கு உரிமையாகார். தெய்வ நேர்மையின் கீழ் அவர்கள் நெடுநாள் அதனை நுகரவும் மாட்டார்கள். - ஆபிரிகாம் லிங்கன்

37, கஸ்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

11-2-85 திங்கட்கிழமை (இரக்தாக்ஷி தை 29)

# மண்டை ஓடுகளின் மேல் அரசியல் தீர்வு வேண்டாம்!

இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவில், இருநாட்டினதும் தலைவர்களுக்கிடையே கடந்த இருதினங்களாக உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

ஜனாதிபதி தூதுவராக அங்கு சென்ற அமைச்சர் அத்துலத்முதலி, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கைப் பிரச்சினையின் விசேஷ தூதராகப் பணியாற்றும் திரு ஜி பார்த்தசாரதி ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய பூரண விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லையாயினும், 'அவை என்னவாக இருக்கும்' என்பது ஊகிக்க முடியாததல்ல.

இராணுவத் தீர்வைக் கைவிடவேண்டுமென்பதையும், அரசியல் தீர்வைக் காண வேண்டுமென்பதையுமே பாரதம் வலியுறுத்தியதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திரா காந்தியாலும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வகட்சி மாநாட்டின் இணைப்பு 'சி'யை பாரதம் இம்முறை வற்புறுத்தியதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு ஆயுதங்களை சப்ளை பண்ணிய மிகப்பெரிய ஜனநாயக வல்லரசான அமெரிக்காவின் திடீர் கைவிரிப்பையடுத்து, இலங்கை-இந்திய பேச்சுவார்த்தை புதுடில்லியில் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில், தென்னிந்தியாவில் நடைபெற்றுள்ள சில சம்பவங்கள் உடனடிக் கவனத்துக்குரியனவாக அமைந்துள்ளன.

திருவனந்தபுரத்தில் எரிபொருள் நிரப்பத் திடீரென இறங்கிய ''டி. ஸி. 8'' விமானமொன்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கலில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், படைக்கலன்கள், வெடி மருந்துகளுடன் இறங்கிய இந்த விமானம் கொழும்புக்கு வந்து கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதையே தாம் விரும்புவதாக ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறிவருகின்ற வேளையில் ஒரு விமானம் நிரம்ப ஆயுதங்களும், வெடிமருந்துகளும் எதற்காகக் கொண்டுவரப்பட வேண்டும் ?

அதிர்ஷ்டவசமாக இந்திய விமான நிலையமொன்றில் இறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இந்த விமானத்துக்கு ஏற்பட்டு விட்டது! அதனால் தான் இந்த உண்மை பகிரங்கமாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சென்னை வந்த அமெரிக்காவின் உயர் ஸ்தானிகர் திரு பார்ன்ஸ், இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும், அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டும் என்றும் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மனமாற்றம் ஆத்மசுத்தியானதா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, அதன் போக்கில் சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளது நன்கு புலப்படுகின்றது.

அதே வேளையில் யாழ்ப்பாண அகதிகள் ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமானோர் கடந்த இரு தினங்களில் பத்தொன்பது வள்ளங்களில் ராமேஸ்வரம் சென்றுள்ளதாக இந்திய அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு சம்பவங்களையும் கூர்ந்து அவதானிக்கும்போது ''பேச்சொன்று செயலொன்றாக'' இருக்கும் இலங்கையின் போக்கு உலக அரங்கில் அம்பலமாகி வருவது தெரிகின்றது.

திருவனந்தபுரத்தில் போர்த்துக்கல் விமானம் இறங்காது கொழும்பு வந்திருக்குமானால், மேலும் பல்லாயிரம் யாழ்ப்பாணம் அகதிகள் அடுத்த சில தினங்களில் ராமேஸ்வரம் செல்லும் நிலையும் உருவாகியிருக்கலாம்.

பயங்கரவாதம் என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு, துப்பாக்கிகளை உருத்திராட்சம் காயாக வைத்து உருட்டும்போது அப்பாவித் தமிழர்கள் அழித்தொழிக்கப்படுவதை அரசியல் தீர்வு என்று சொன்னால் அதனை அங்கீகரிக்க முடியுமா ?

ஆட்சியாளர் சொல்லிவரும் அரசியல்தீர்வு, எலும்புக் கூடுகள், மண்டை ஓடுகளின் மேல் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், புதுடில்லியின் தலைமையில் நியாயமான ஒரு தீர்வு உடனடியாகக் காணப்பட வேண்டும்.

### பாரத உறவு பற்றி பாகிஸ்தான் மந்திரி

# பேச்சுவார்த்தை நிகழ்வதற்கு நல்ல வாய்ப்புகள் உண்டு!

(இஸ்லாமாபாத்)

''பாரதத்துக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே நட்புறவு வலுப்படுவதற்குரிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதற்கு ஒளிமயமான வாய்ப்பு இருக்கிறது'', என்று பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் நியாஸ் நாயக் இஸ்லாமாபாத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். பாரத - பாகிஸ்தான் நட்புறவின் அவசியம் குறித்து அவர் இஸ்லாமாபாத்தில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் வற்புறுத்தினார்.

''பாகிஸ்தான் பொதுத் தேர்தலும் பாரத சட்டசபைத் தேர்தல்களும் நடைபெற்று முடிந்த பின் இருநாடுகளும் இப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம்'', என்று கூறிய அவர், இரு தரப்பு உறவுகள் குறித்து பாரத வெளியுறவுச் செயலர் திரு பண்டாரியுடனும் ஆலோசனை நடத்தினேன்'' என்றும் சொன்னார்.

இதேவேளை பாகிஸ்தானில் உள்ள பாரதத் தூதுவர் திரு. கே. டி. சர்மா ராவல்பிண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் கடந்த பத்து ஆண்டுகளில் இரு தரப்பு உறவுகள் குறித்தும் மதிப்பீடு செய்தார். பரஸ்பர நல்லுறவின் அவசியமும் அவரால் வற்புறுத்தப்பட்டது.

## திருப்பத்தூரில் 34 பேர் போட்டி

(சென்னை)

வட ஆற்காடு திருப்பத்தூர் சட்டசபைத் தொகுதியில் முப்பத்து நான்கு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மொத்தம் முப்பத்து ஒன்பது வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன அவற்றில் நான்கு நிராகரிக்கப்பட்டுவிட்டன

இங்கு இந்திரா காங்கிரஸுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையே நேரடிப் போட்டி நிலவுகிறது. இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. வை. சண்முகம் மரணமானதை அடுத்து இவ் இடைத் தேர்தல் நடைபெறுகிறது

## கம்பூச்சியாவும் வியட்னாமும் உக்கிரமான பலப் பரீட்சை

(லண்டன்)

கம்பூச்சிய, வியட்னமிய யுத்தம் நேற்று உச்சக்கட்டத்தை அடைந்திருந்ததாக அறிவிக்கப்படுகிறது.

கிளர்ச்சிப்படைகளினதும் கெரில்லாக்களினதும் தாக்குதல்கள் அடுத்தடுத்து நடைபெற்றன என்று தாய்லாந்து இராணுவம் அறிவித்தது.

கம்பூச்சியப் படைகளின் தாக்குதலைத் தடுத்து நிறுத்த வியட்னமியப் படைகளால் ஒருகட்டத்தில் இயலாது போயிற்று என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## போட்டியின்றி தெரிவானார்

(புதுடில்லி)

மார்ச் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கு முதல் வெற்றி கிடைத்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் சம்பிராகா தொகுதியில் இருந்து இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் குலாப்சிங் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட முனைந்த இரு வேட்பாளர்களும் தத்தம் வேட்புமனுக்களை வாபஸ் பெற்றுக்கொண்டதனையடுத்தே இவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## எதியோப்பிய பஞ்சம் நீங்க பல புதிய நடவடிக்கைகள்

(அடிஸ்அபாவா)

எதியோப்பியாவில் நிலவும் பெரும் பஞ்ச நிலைமையைச் சமாளிக்கவும் பொருளாதாரச் சீர்குலைவை நேர்ப்படுத்தவும் எதியோப்பிய அதிபர் மால் கெஸ்ரே பல நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.

அதற்கிசைவாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள எதியோப்பியரிடம் அவர் நிதியுதவி கோரியுள்ளார். நிலக்கரிக்கு ரேஷன் விதிக்கப்படும், போக்குவரத்துத் துறையில் மாற்றம் செய்யப்படும் ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதிகள் தடை செய்யப்படும் என்றும் அவர் தன் புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.

எதியோப்பியாவின் கொடும் பஞ்ச நிலை குறித்து அன்னை திரேஸாவும் மிகுந்த மனவேதனை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## சுகவீன நிலையில் செரனன்கோ

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் ஜனாதிபதி செரனன்கோ உடல் நலம் குன்றியுள்ளார் என்ற செய்தியை சோவியத் யூனியனின் தினசரியான 'பிராவ்தா'வின் பிரதம ஆசிரியர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

### இலங்கை நிலை: ஜனார்த்தனன் கருத்து

## வடக்கு கிழக்கில் ராணுவம் விலக்கப்பட வேண்டும்

(சென்னை)

''இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்'' என்று உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் கோரிக்கை விடுத்துள்ளார்.

''இலங்கையின் இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்வதற்கு வழி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவம் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் புதுடில்லியில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது இவ்விடயத்தையும் பாரத அரசு அவரிடம் வற்புறுத்திக் கூறவேண்டும்'' என்று டாக்டர் ஜனார்த்தனன் தனது வேண்டுகோளில் கூறியுள்ளார்.

### மதுரையில் 'அமிர்' கூறிய கருத்து:

## ''பேச்சுக்கள்: இலங்கை அரசு வழிகளை அடைத்து விட்டது''

(மதுரை)

''இலங்கை இனப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கப்படுவதற்குரிய பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இலங்கை அரசினால் நடத்தப்படும் என நாம் எதிர்பார்க்கவில்லை'', என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் மதுரையில் வைத்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

''பேச்சுவார்த்தைகளுக்குரிய வழிகளை அரசு அடைத்துவிட்டது. பேச்சுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அது எடுக்கத் துவங்கிவிட்டது'' என்றும் அவர் சொன்னார்.

## உ. பியில் ராஜீவ்

(புதுடில்லி)

பிரதமர் திரு. ராஜீவ்காந்தி நேற்று மேற்கொண்ட உத்தரப் பிரதேச சுற்றுப்பயணத்தின் போது தேசிய ஒருமைப்பாடு, வகுப்பு வாதத்துக்கு இடம் கொடுக்காமை ஆகியவற்றை வலியுறுத்தினார்.

## 30 ஆயிரம் வேட்பு மனு

(புதுடில்லி)

மார்ச் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ள பதினொரு சட்டசபைகளுக்கும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்துக்கும் மொத்தம் முப்பதாயிரத்துக்கும் அதிகமான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## கென்யாவில் விளையாட்டு துப்பாக்கி பாவனைக்கு தடை

(லண்டன்)

கென்யாவில் விளையாட்டுத் துப்பாக்கிகள் பாவிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கொள்ளையில் ஈடுபடுவோர் இத்துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

கென்யாவில் சாமான்ய மக்களுக்கு உண்மைத் துப்பாக்கிகளுக்கும் போலித் துப்பாக்கிகளுக்கும் வித்தியாசம் தெரிவதில்லையாம்.

11. 2. 1985 திங்கட்கிழமை

# ஈழமுரசு

## 204 பலி; 26 படுகாயம்

### எழுச்சி தரும் தகவல்

கடந்த மாதம் 19ம் திகதி முறிகண்டியில் நடைபெற்ற புகையிரத தகர்ப்பு நடவடிக்கையில் 204 சீருடையினர் பலியானதாகவும், 26 பேர் படுகாயமடைந்ததாகவும் 'ரெலோ'வின் உத்தியோகபூர்வ வெளியீடான எழுச்சி செய்தி வெளியிட்டுள்ளது இந்த ரயிலில் பொது மக்கள் செல்வதைத் தடுப்பதற்காக கிளிநொச்சி ரயில் நிலையத்தைச் சுற்றி குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதாகவும், அன்றைய தினம் பளை ரயில பாதை தகர்க்கப்பட்டதால் மேலும் நானூறு பயணிகள் செல்வது மறிக்கப்பட்டதாகவும் இங்கு மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு பேட்டியில் ராஜீவ் தகவல்:

# தமிழ் நாட்டில் பயிற்சி முகாம் இல்லை! அகதிகள் பிரசுரம் வெளியிடுகின்றனர்!!

"தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளுக்கான பயிற்சி முகாம் எதுவுமில்லை சில பிரசுரங்கள் வெளிவருவது உண்மை. அவை இங்குள்ள அகதிகளால் வெளியிடப்பட்டுள்ளன" என்று ஆங்கிலச் சஞ்சிகைக்கான பேட்டியொன்றில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்

இலங்கைப் பிரச்சினை பற்றி கேட்கப்பட்ட இரு கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு —

வினா; தமிழ் நாட்டிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகள் 'தாடாபல் நீங்கள் என்னசெய்யப் போகிறீர்கள்?

விடை: இது விடயமாகத் திடகாத்திரமான தகவல் எதுவும் எம்மிடம் இல்லை. தமிழர்கள், அதாவது அகதிகள், அச்சிடும்சில துண்டுப் பிரசுரங்களையும் அறிக்கைகளையும் அவர்கள் எனக்கு அளித்துள்ளனர் அதையிட்டு நாம் எதுவும் செய்வதற்கில்லை. எதனையும் அச்சிட எவருக்கும் இடமுண்டு நாம் அகதிகளைச் சரிபார்த்திருக்கிறோம்; மக்கள் அவற்றை அச்சிடுகின்றனர், ஆனல் நான் அறிந்தமட்டில் பயிற்சி இல்லை நாம் இலங்கையிடம் வேண்டுவது அகதிகள் அங்கு மீண்டுசெல்வதைச் சாத்தியமாக்கித்தரும் ஒரு தீர்வேயாகும். 40 000 மக்களை நாம் இங்கு வைத்திருக்க முடியாது இப்பொழுது அவர்கள் அதைவிட அதிகமானோராக இருக்கலாம் இலங்கையில் நெருங்கிய உறவினர்களை உடையவர்களை நாம் இங்கு வைத்திருக்க இயலாது. அங்கே நடந்து கொண்டிருப்பது உள்ளபடியாக அகோரமானது. இராணுவ அல்லது பலவந்தமான தீர்வு எதுவும் அகதிகள் மீண்டுசெல்ல அனுகூலமாக இருக்கமாட்டாது என நாம் உணர்கிறோம். ஆகையால், அவர்கள் ஏதாவது ஒருவித அரசியல் தீர்வுக்கு வருதல் வேண்டும். பாவம், இப்பிறவிகள் அங்கு மீண்டு செல்லுதற்கு ஏற்ற ஒரு சூழ் நிலையை நாம் உண்டாக்க வேண்டும்.

வினா: ஆனல் வரவரமேன் மேலும் கடினமாகத் தெரிகிறது இந்த அரசியல் தீர்வு. புதிய ஓர் அரசின்பால் உங்கள் மனப்பான்மை என்ன?

விடை: அக்கட்டத்திற்கு நாம் வந்துவிட்டோம் என நான் நினைக்கவில்லை. ஆனல் அதற்கு அரசியலாண்மை தேவை. என்பதோடு இலங்கை மக்கள் அதற்கேற்ப எழுவார்கள் எனவும் நான் நம்புகிறேன்.

ஆசிரியர் விவகாரங்களில் ஏமாற்று வேலையா?

## கல்விச் சேவைக் குழுவின் நடவடிக்கைக்கு தமிழாசிரியர் சங்கம் பலத்த பாராட்டு

ஆசிரிய இடமாற்றம், நியமனம் ஆகியன சம்பந்தமான விஷயங்களில் சில தீயசக்திகள் ஏமாற்று நடவடிக்கைகளில ஈடுபட்டுள்ளன என்றும், இவற்றின் மீதுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு.கே. ஜெபக்குமார் விடுத்திருந்தஎச்சரிக்கையை இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் வரவேற்றுள்ளதுடன், இந்நடவடிக்கை எடுத்தமைக்காக திரு. ஜெயக்குமாருக்குத் தமது பாராட்டுதலையும் தெரிவித்துள்ளது.

பல்வேறு வழிகளில் இன்னல்களை அனுபவித்து வரும் ஆசிரிய சமுதாயத்தைச் சூறையாடும் மோசடிக் கும்பல்களை ஒழித்துக் கட்ட வேண்டிய அவசியம இப்போது ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த மேற்படி சங்கப் பொதுச் செயலாளர் திரு: த. மகாசிவம், இவ்விடயத்துல் தமது சங்கம பூரணமானஒததுழைப்பையும் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் சொன்னார்.

ஆசிரிய இடமாற்றம், நியமனம சம்பந்தமான மோசடிகளில யாராவது ஈடுபட்டால் அதுபற்றித் தமக்கு நேரடியாகவே புகார் செய்யலாமென்று ஆணைக்குழு உறுப்பினர் திரு ஜெயக்குமார் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே.

பனை அபிவிருத்திச் சபை கார்

## கடத்தப்பட்டதால் அவசிய வேலைகள் பெரும்பாதிப்பு

ஐந்து தினங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின் உத்தியோகபூர்வபாவனைக்கான கார் இன்னமும் மீட்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டுளளது.

தமிழ் பிரதேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரேயொரு முக்கிய மூலவளமான பனையை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் பனை அபிவிருத்திச் சபையின வாகனத்தைக் கடத்தியதால் இப்பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகள தடைப்படும் அபாயம் உருவாகியுள்ளதாக மேற்படி சபையின பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பல்லாயிரக் கணக்கான மக்களின் நனமை கருதி கடத்தப்பட்ட வாகனத்தை மீள ஒப்படைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### யாழ. மின்...

—1-ம பக்கத் தொடர்

ரூபா பெறுமதியான மின்சார பராமரிப்புக்குத் தேவையான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

சிலமாதங்களுக்கு முன்னர் இங்கிருந்த வாகனமொன்று எரிக்கப்பட்டது. மற்றுமொரு வாகனங்களும பொலிஸ நிலையத்தில பாதுகாப்புக்காக விடப்பட்டுள்ளன. நேற்று நடைபெற்ற கொள்ளையை அடுத்து யாழ்ப்பாண மின்சார சேவையில பெரும பாதிப்பு ஏற்படலாமென அஞ்சப்படுகிறது.

யாழ்ப்பாணம ஆஸ்பத்திரி சேவை, வியாபாரிகளின நீரிறைக்கும் வேலை, தொழிற்சாலைகள் இயங்குதல் போன்றவற்றில ஏதாவது மின்சாரக் கோளாறு ஏற்பட்டால் உடனடியாக திருத்த வேலைகளை மேற்கொள்வதில இனிமேல் பெரும நெருக்கடி ஏற்படுமென்று மேற்படி மின்சார இலாகா சுப்பிரின்டென் திரு. எம. நவரத்தினராஜா தெரிவித்தார்.

இப்பொருட்களைக் கொள்ளையடித்தவர்கள் இன்றைய நிலையை உணர்ந்து, மின்சாரத்தின் அத்தியாவசியத்தைக் கருத்தில கொண்டு திருப்பித் தருவது நல்லது எனவும் அவர் சொன்னார்.

### பாரத விஜய....

1- ஆம பக்கத் தொடர்

வும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும பிரதமர் ராஜீவ் காந்தியும சந்தித்துப பேசமுடியாத காரணத்தாலேயே தான் இங்கு வந்ததாகவும் இப்பிரச்சினையில இந்தியா கொண்டுள்ள நிலையை தான்புரிந்துகொண்டதாகவும அமைச்சர் அத்துலத்முதலி குறிப்பிட்டுச் சொன்னார்.

அமைச்சர் இன்று காலை ஜனாதிபதியைச்சந்தித்துதனது இந்திய விஜயத்தின பெறுபேறுகளை எடுத்து விளக்குவார்.

### கோவில் முன...

1- ஆம பக்கத் தொடர்

லப்படும் கணேஸ் என்றழைக்கப்படும சௌந்தரராஜன நெற்றுத் தலையில சூடுக்காயத்துடன இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

### 16,000 கிலோ....

1- ஆம பக்கத்தொடர்

விக்கப்பட்டதுடன, விமான மும தடுத்து வைக்கப்பட்டது. இச்சமயம புதுடில்லியல் இலங்கை இந்திய தலைவர்களின உயர்மட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் பரபரப்பான நிலை ஏற்பட்டது.

இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பெர்னாட் திலகரத்தின, பாரத பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை அவசரம அவசரமாகச் சந்தித்து நிலைமையை விளக்கினார்.

இதன் பின்னர் சிவில் விமான போக்குவரத்து இயக்குனர் ஜெனரல, விமான நிலைய அதிகாரிகளுக்கு அனுமதி அளித்த பின்னர் விமானம் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டது.

### யாழ். மாவட்ட....

1-ஆம பக்கத் தொடர்

தொண்டர் ஸ்தாபனங்களும் உதவிகளை வழங்கமுன்வந்தன.

சுமார் 23700 குடும்பங்கள் யாழ் மாவட்டத்தில இதனல் பயனடைகின்றன, இவர்களுக்கு துணிவகைகளும் பின்னர் வழங்கப்படுமெனவும் போருட நிறுவன திட்ட இணைப்பாளரும நிர்வாகியுமான திரு சி சண்முகதாசன் தெரிவித்தார்.

### எம். ஜி ஆர்.....

—1-ம் பக்கத் தொடர்

கொண்டார். முன்னதாக காலை 8 50 மணிக்கு முதல்வர் ராஜ் வனுக்கு வந்தபோது, தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலர் திரு. கே. சொக்கலிங்கம் மாலை சூட்டி அவரை வரவேற்றார், 9 மணிக்கு பதவிப் பிரமாண நிகழ்ச்சி நடைபெற்றது. 9-25 மணிக்கு ராஜ்பவனைவிட்டுப் புறப்பட்ட முதலவர் வெளியில் திரண்டு நின்ற மக்கள் வெள்ளத்தின் அன்பான வரவேற்பை ஏற்றுக் கொண்டபின் அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் தலைமைச் செயலகத்திற்குச் சென்று அதிகாரிகளைச் சந்தித்ததுடன் தனது அலுவலகத்தில் சற்று நேரம் அமர்ந்திருந்து கடமைகளைப் பார்த்த பின் ராமாவரத்திலுள்ள தனது இல்லத்திற்குத் திரும்பினார்.

செவ்வாய்க்கிழமை முதல்வரால் அமைச்சரவைப் பட்டியல் ஆளுநரிடம் கையளிக்கப் படவுள்ளது.

### சங்கக் கடை...

—1-ஆம் பக்கத் தொடர்

தாக இப்போது கணக்கிடப் பட்டுள்ளது.

இக் கொள்ளையைத் தாம் செய்யவில்லைஎன பல இயக்கங்களின் பிரதிநிதிகள் சங்க நிர்வாகத்திடம் நேரில் சென்று தெரிவித்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இக் கொள்ளையைத் தொடர்ந்து கடந்த 7ம் திகதி முதல் பூட்டப்பட்டிருந்த சங்கத்தின் சகல கிளை விற்பனை நிலையங்களும மூன்று நாட்களின் பின்னர் நேற்றுத் திறக்கப்பட்டன நேற்று விடுமுறை தினமாக இருந்த போதிலும் பாவனையாளரின் கஷ்டங்களைப் போக்குவதற்காகவே திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### மீண்டும் இன்று ரயில் சேவை

கடந்த ஆறும் திகதி முதல் பாதுகாப்பு காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொழும்பு-மட்டுநகர், கொழும்பு-திருமலை இரவு மெயில் ரயில் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகிறது.

### கரையோர பாதுகாப்புக்கு 5 கோடி ரூபா

(கொழும்பு)

இலங்கை கரையோரப் பகுதிப் பாதுகாப்புக்கென வருடத்துக்கு ஐந்து கோடி ரூபா செலவிடப்படவுள்ளது என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் டென்மார்க் நிபுணர்களின் உதவியுடன் கரையோரப் பாதுகாப்பு அபிவிருத்தித் திட்டமும் வகுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

### அலுவலகம் இடம் மாற்றம்

முருங்கன் உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் டிசம்பர் மாதத்திலிருந்து தற்காலிகமாக வவுனியா அரசினர் பண்ணைக்கு மாற்றப் பட்டுள்ளது.

### இவர்களுக்கு உணவுப் பஞ்சம்

நீர்கொழும்பு பகுதியில் இருக்கும் ஏழாயிரம் மீனவ அகதிகள் முகாமில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கடற்றொழில அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார். அரசாங்கம் வழங்கும் உதவிகள் போதாமையால் இவர்களுக்கு உணவு பங்கிட முடியவில்லை என்றும் அதனல் தனியார் நிறுவனங்கள், பொதுமக்களை இந்த அகதிகளுக்கு உதவி செய்யும்படி அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

### ஊழியர் அச்சம்

(இருபாலை)

யாழ்ப்பாணம் தெற்கு கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடத் திணைக்களத்தின் ஊழியர்கள் வேலை செய்வதற்கு தயக்கம் தெரிவித்துள்ளனர்,

அண்மையில் இப்பகுதியில் ஏற்பட்ட சில அசம்பாவிதங்கள் காரணமாகவும் குருநகர் இராணுவ முகாமிற்கு முன்பாகவே இத் திணைக்களம் அமைந்திருப்பதாலும எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயப் பீதியுடன் ஊழியர்கள் வேலைக்குச் செல்லவும், வேலை செய்யவும் தயக்கம் கொண்டுள்ளனர்.

### மாவுக்குத....

— 1-ம் பக்கத் தொடர்

யென அறிவிக்கப்பட்டுள்ளது. சில பேக்கரிகளில் காலையில் மட்டும் மிகக் குறைவான தொகை பாண் தயாரிக்கப் படுகின்றது.

வேறு சில பேக்கரிகள் ஒரு மூடைமாவை கள்ளமார்க்கட்டில் அறுநூறு ரூபாவுக்கும் கூடுதலான விலைக்குப் பெற்று கட்டுப்பாட்டு விலைக்கு பாணை விற்க முடியாது அவதிப்படுகின்றன.

புதன்கிழமை மாக் கப்பலொன்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈழமுரசு சாயட பாட அட்டாடசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால. 37,கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 11-2-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336